துணை ஆணையர் (மா.வ), வடக்கு -3 அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை - திருமதி.செ.அன்புத்தமிழரசி, பி.எஸ்சி. பி.எல்.,
இடம் - எண்.518, 5வது தளம், ஒருங்கிணைந்த வணிகவரிக் கட்டிடம்
யானைக்கவுனி சாலை, சென்னை -3

ந.க.எண். 1510/2023/அ1 நாள்.19.09.2024

| பொருள் | : | பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - சென்னை (வடக்கு) கோட்டம் துணை ஆணையர்(மாவ), வடக்கு - 3, சென்னை-3, - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV – 2022-23 மூலம் பணி நியமனம் செய்யப்பட்டு - பணியில் சேர்ந்த இளநிலை உதவியாளர்களின் பதவி பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது. |
|---|---|---|
| பார்வை | : | 1 செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை 03 கடிதம் எண்.453/பிஎஸ்டி-பி1/2022, நாள் 26.07.2023. |
| | | 2 இணை ஆணையர்(மா.வ), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் செ.மு.ந.க.5983/2023/அ2, நாள்.22.09.2023. |
| | | 3 இணை ஆணையர்(மா.வ), சென்னை (வடக்கு) கோட்டம் அவர்களின் செ.மு.ந.க.7285/2023/அ1, நாள்.26.09.2023. |

ஆணைகள்

பார்வை 1 ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 24.07.2022 ம் நாள் நடைபெற்ற தொகுதி IV தேர்வின் மூலம் கீழ்கண்ட இளநிலை உதவியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பார்வை 3 ல் காணும் இணை ஆணையர்(மாவ),சென்னை (வடக்கு) கோட்டம் அவர்களின் செயல்முறை ஆணையின்படி பணி நியமனம் செய்யப்பட்டனர்.

| வ. எண் | பெயர் /பதவி திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | சு. தமிழ்ச்செல்வன், இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர் (மாவ), அலுவலகம், வேப்பேரி வரிவிதிப்பு வட்டம், சென்னை -06 | 04.10.2023 மு.ப | 04.10.2023 மு.ப |
| 2. | வெ. சௌமியா இளநிலை உதவியாளர் | மாநிலவரி அலுவலர் அலுவலகம், பெரம்பூர் வரிவிதிப்பு வட்டம், சென்னை -06 | 03.10.2023 மு.ப | 03.10.2023 மு.ப |
| 3. | பி. ஈ.ஆனந்தபாபு இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர்(மாவ) அலுவலகம், வில்லிவாக்கம் விதிப்பு வட்டம், சென்னை 06 | 09.10.2023 மு.ப | 09.10.2023 மு.ப |
| 4. | பி. தில்லைவேந்தன் இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர்(மாவ) அலுவலகம், தூளை வரிவிதிப்பு வட்டம், சென்னை 06 | 04.10.2023 மு.ப | 04.10.2023 மு.ப |
| 5. | அ. தமிழ்வாணன் இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர்(மாவ) அலுவலகம், எழும்பூர் வரிவிதிப்பு வட்டம், சென்னை 31 | 04.10.2023 மு.ப | 04.10.2023 மு.ப |
| 6. | ஆ. மனோஜ் பிரபு இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர்(மாவ) அலுவலகம், வேப்பேரி வரிவிதிப்பு, வட்டம், சென்னை 03. | 03.10.2023 மு.ப | 04.10.2023 மு.ப |

(2) மேற்படி தனியாளர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்ய தமிழ்நாடு அமைச்சு பணியாளர் விதி 32 (அ) (1) -ன்படி ஆணை வழங்கப்படுகிறது.

(3) மேற்கண்ட இளநிலை உதவியாளர் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணிக் காலத்தில் ஈராண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(4) தகுதிகாண்பருவக் காலத்தில் மேற்படி தனியாளர் கீழே குறிப்பிட்ட தேர்வுகள்/பயிற்சிகளில் தேர்வு பெறவேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

1. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைகள்.
2. அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சி.

(5) இப்பணிவரன்முறை ஆணை சென்னை உயர்நீதிமன்ற சென்னை மற்றும் மதுரை கிளைகளில் பணி நியமன ஆணைகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது.

(6) மேற்கண்ட தனியாளர், பணிவரன்முறை ஆணையினைத் தொடர்ந்து இரண்டாவது மற்றும் அதற்கு பிறகுமுள்ள வருடாந்திர ஊதிய உயர்வினை, தகுதிகாண் பருவம் முடித்தபிறகு பெற தகுதியுடையவராவார்.

(7) மேற்படி தனியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்டதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணிநிலையில் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

ஒம்/- செ. அன்புத்தமிழரசி,
துணை ஆணையர் (மாவ),
வடக்கு -3, சென்னை-3.

பெறுநர்
இளநிலை உதவியாளர்கள்,
1. உதவி ஆணையர் (மாவ), துறை வரி விதிப்பு வட்டம், சென்னை-6.
2. உதவி ஆணையர் (மாவ), எழும்பூர் வரி விதிப்பு வட்டம், சென்னை-31.
3. உதவி ஆணையர் (மாவ), வில்லிவாக்கம் வரி விதிப்பு வட்டம், சென்னை-6.
4. உதவி ஆணையர் (மாவ), வேப்பேரி வரி விதிப்பு வட்டம், சென்னை-6.
5. மாநிலவரி அலுவலர் அலுவலகம், பெரம்பூர் வரி விதிப்பு வட்டம், சென்னை-6.

நகல்
1. இணை ஆணையர்(மாவ),சென்னை (தெற்கு) கோட்டம்,சென்னை -35
2. இணை ஆணையர்(மாவ),சென்னை (வடக்கு) கோட்டம்,சென்னை-3

//உண்மை நகல்//

மாநிலவரி அலுவலர் வேப்பேரி

19.07.2024